SPC

# இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்

# வெற்றிடங்கள்

இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அரச வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்து மற்றும் சத்திரசிகிச்சை பொருட்களை இறக்குமதி செய்யும் ஒரே அரச நிறுவனம் என்பதோடு, தனியார் துறைக்காக மருந்துகளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் முதன்மையான நிறுவனமுமாகும்.

எமது நிறுவனத்தால் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீழுள்ளவாறு தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **முகாமைத்துவ உதவியாளர் (தரக் கட்டுப்பாட்டு உதவியாளர்) – (MA 2.1) III ஆம் தரம்**

**தகைமைகள்**

(a) இரசாயன விஞ்ஞானத்திற்காக திறமைச் சித்தியுடன் க.பொ.த. (உ/தர) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் சித்தி பெற்றிருத்தல்

**அத்துடன்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயன விஞ்ஞானத்தை பிரதான பாடமாகக் கொண்ட பல்கலைக்கழக பட்டம் ஒன்று

**அல்லது**

(b) இரசாயன விஞ்ஞானத்திற்காக திறமைச் சித்தியுடன் க.பொ.த. (உ/தர) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் சித்தி பெற்றிருத்தல்.

**அத்துடன்**

Institute of Chemistry Ceylon இல் இரசாயன விஞ்ஞான பட்ட நிகழ்ச்சியை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு:** ரூபா 37,890/- 375/- x 10, 440/- x 7, 620/- x 4, 825/- x 20 - 63,700/-

(தோராயமாக மாதச் சம்பளம் ரூபா 115,914/- அளவாகும்)

**வயது வரம்பு:** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இந்த உயர் வயது வரம்பு உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு பொருந்தாது.)

2. **முகாமைத்துவ உதவியாளர் (உற்பத்தி உதவியாளர்) – (MA 1.1) III ஆம் தரம்**

**தகைமைகள்**

(a) (i) க.பொ.த. (சா/தர) பரீட்சையில் இரு முறைகளுக்கு மேற்படாத தடவைகளில், சிங்களம்/ தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடம் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**மற்றும்**

(ii) க.பொ.த. (உ/தர) (புதிய பாடத் திட்டம்) பரீட்சையில் (பொது பரீட்சை தவிர்த்து) இரசாயன விஞ்ஞான பாடம் உட்பட குறைந்தது 02 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**அல்லது**

(b) (i) க.பொ.த. (உ/தர) (பழைய பாடத் திட்டம்) பரீட்சையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**மற்றும்**

(ii) கணினி அறிவு

**மற்றும்**

(iii) அரச/ அரச கூட்டுத்தாபனம்/ சபை/ சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் பணிகள் தொடர்பில் 03 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான சேவை அனுபவம்.

**சம்பள அளவு:** ரூபா 34,890/- 375/- x 10, 440/- x 7, 620/- x 4, 825/- x 20 - 60,700/-

(தோராயமாக மாதச் சம்பளம் ரூபா 110,458/- அளவாகும்)

**வயது வரம்பு:** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இந்த உயர் வயது வரம்பு உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு பொருந்தாது.)

**விண்ணப்பதாரர்கள்,**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமையை முறையாக மேற்கொள்வதற்கு தேவையான உடல் மற்றும் உளத் தகைமை இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மாதாந்த வருகை கொடுப்பனவு, பெறப்படாத விடுப்புகளை பணமாக்கல், வருடாந்த பெறுகைக் கொடுப்பனவு, நலன்புரி நன்மைகள், மருத்துவ நன்மைகள் மற்றும் ஊழியருக்கு மற்றும் குடும்பத்தினருக்கான மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் மருத்துவ காப்புறுதி உட்பட பல்வேறு நன்மைகள் உரித்தாகும்.

விண்ணப்பதாரர்களால் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பத்தில், வயது, தகைமை, பயிற்சி, சேவை அனுபவம், தற்போதைய பதவி, சம்பளம் மற்றும் சம்பள அளவு, வகித்த முந்தைய பதவிகள் மற்றும் முந்தைய தொழில் வழங்குநருக்கு இணைந்த மற்றும் விலகிய திகதி ஆகிய விடயங்களை உள்ளடக்கி தேசிய அடையாள அட்டையின் பிரதி, உறுதி செய்யப்பட்ட பிரதிகள் மற்றும் உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரியுடன் அனுப்புதல் வேண்டும். குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாது அனுப்பும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை தயவுடன் கருத்தில் கொள்ளவும்.

அரச/ அரச கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபை ஒன்றில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை, குறித்த நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரர் தகைமைகளை பூர்த்தி செய்திருப்பதாக ஏற்பது குறித்த தகைமைகள் மற்றும் குறித்த வயது வரம்பு விண்ணப்பம் ஏற்கும் திகதியாகும்போது அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமாகும்.
2. மேலுள்ள முறைக்கு அப்பால் அனுப்பப்படும் அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிப்பதற்கு காரணமாகும்.
3. விண்ணப்பத்தில் வழங்கப்பட்டிருக்கும் அனைத்து விபரங்களும் சரியாக மற்றும் முழுமையானது என்பதை விண்ணப்பதாரரால் உறுதி செய்தல் வேண்டும்.
4. அனைத்து விண்ணப்பதாரர்களும் சிறந்த பண்புடையவராக மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கையில் குற்றவாளியாகாதவராக இருத்தல் வேண்டும்.
5. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய விண்ணப்பங்களை கோரிய பின் அந்தந்த பதவிக்கு தொடர்புடையவாறு எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் நியமிக்கப்படும் சபை ஒன்றின் மூலம் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் முடிவுகள் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.
6. சிறு எண்ணிக்கையான வெற்றிடங்களுக்காக அதிக எண்ணிக்கையானோர் நேர்முகப் பரீட்சைக்கு தகுதி பெறும்போது அந்த எண்ணிக்கை 25 இற்கு மேற்படும் சந்தர்ப்பங்களில் அனைத்து வெற்றிடங்களுக்கும் ஐந்து பேர் என்ற விகிதத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் நியமன அதிகாரிகளுக்கு முடியும்.
7. இந்த அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயம் அல்லது ஆட்சேர்ப்பின் செயற்பாட்டின்போது எழுகின்ற எந்தவொரு சிக்கல் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படுவது அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினாலாகும். மேலும் பணிப்பாளர் சபையின் முடிவு இறுதி முடிவாக அமையும்.

அனைத்து விண்ணப்பங்களும் 2026.07.06 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.


**பதில் பிரதி பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்),**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**"மெஹெவர பியச", 16ஆவது மாடி, இல. 41,**
**கிருள வீதி, நாராஹென்பிட்ட,**
**கொழும்பு 05.**

**தொலைபேசி இலக்கம் 0112 320 356/9**